# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் ஸ்பெயினிலுள்ள பைத்தூர் ரஹ்மான் பள்ளிவாயிலில்
## 29.03.2013 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் சூரா அல் பக்கராவின் 128, 129 ஆகிய வசனங்களை ஓதினார்கள்:**

وَإِذْ يَرْفَعُ إِبْرٰهِيمُ الْقَوَاعِدَ مِنَ الْبَيْتِ وَإِسْمٰعِيلُ ۖ رَبَّنَا تَقَبَّلْ مِنَّا ۖ
إِنَّكَ أَنتَ السَّمِيعُ الْعَلِيمُ ۝ رَبَّنَا وَاجْعَلْنَا مُسْلِمَيْنِ لَكَ وَمِن ذُرِّيَّتِنَا
أُمَّةً مُّسْلِمَةً لَّكَ وَأَرِنَا مَنَاسِكَنَا وَتُبْ عَلَيْنَا ۖ إِنَّكَ أَنتَ التَّوَّابُ الرَّحِيمُ ۝

*இந்த வசனங்களின் பொருள் : இப்ராஹீமும், இஸ்மாயீலும் அந்த வீட்டின் அடித்தளங்களை உயர்த்திய நேரத்தில் அவர்கள் இவ்வாறு துஆ செய்தனர்.*

*எங்கள் இறைவா! எங்களிடமிருந்து இதனை ஏற்றுக் கொள்வாயாக! நிச்சயமாக நீயே நன்கு கேட்கக் கூடியவனும் நன்கு அறியக்கூடியவனுமாவாய்.*

*எங்கள் இறைவா! எங்கள் இருவரையும் உனக்கு கட்டுப்படக்கூடிய அடியார்களாக ஆக்குவாயாக! எங்களது வழித்தோன்றல்களிலிருந்தும் உனக்கு கட்டுப்படக்கூடிய ஒரு சமுதாயத்தை தோற்றுவிப்பாயாக! எங்களுக்கு உன்னை வணங்குவதற்கும் தியாகங்கள் செய்வதற்குமான வழிமுறைகளைக் காட்டுவாயாக! எங்களது தவ்பாவை ஏற்றுக் கொண்டவாறு எங்கள் பக்கம் திரும்புவாயாக! நீயே மிகவும் அதிகமாக தவ்பாவை ஏற்றுக் கொள்பவனும் மேலும் மேலும் கருணை காட்டக்கூடியவனுமாவான். (2:128,129)*

அல்ஹம்துலில்லாஹ்! இன்று நமக்கு ஸ்பெயினில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் இரண்டாவது பள்ளிவாசலைக் கட்டுவதற்கான நல்வாய்ப்பு கிடைத்துள்ளது. ஏறக்குறைய 7 வருடங்களுக்கு முன்பு நான் பெட்ரோபேடில் உள்ள மஸ்ஜிது பசாரத்தில் வைத்து, பள்ளிவாசல்களைக் கட்டுவதன் முக்கியத்துவம் பற்றி கவனமூட்டியிருந்தேன். அந்த சமயத்தில் வேலன்ஸியாவில் பள்ளிவாசல் கட்டப்பட வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது. அஹ்மதிகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பினும் இந்தப் பகுதியில் பள்ளிவாசல்களைக் கட்ட வேண்டும் என்று நான் கருதியதன் காரணமும், அதன் முக்கியத்துவமும் ஏன் இருக்கின்றது என்றால் அஹ்மதிகள் இந்தப் பகுதியில் 130 பேர்களே இருக்கின்றார்கள். மற்ற இடங்களில் இதை விட அதிகமாக இருப்பார்கள். எவ்வாறிருப்பினும், மஸ்ஜிது பசாரத்திற்குப் பிறகு நாம் இந்த பள்ளிவாசலைக் கட்ட நினைத்தது வரலாற்றின் அடிப்படையில் இந்த இடத்திற்கு இருக்கும் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டேயாகும். 30 வருடங்களுக்கும் அதிகமான காலக்கட்டத்திற்குப் பிறகு அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு இந்தப் பள்ளிவாசலைக் கட்டுவதற்கான நல்வாய்ப்பு கிடைத்திருந்தாலும் இந்தக் காலக்கட்டத்தில் முஸ்லிம்கள் இந்த நாட்டிற்கு மிகவும் அதிகமாக வர ஆரம்பித்தனர். ஆனால் எவ்வாறிருப்பினும் மஸ்ஜிது பசாரத்தின் காரணமாக ஒரு வழி திறந்தது. 700 வருடங்களுக்குப் பிறகு முதல் பள்ளிவாசலைக் கட்டுவதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு வழங்கினான். இந்த இடத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுவதற்கு முன் இதையும் கூறி விடுகின்றேன். இப்போது இங்கு முஸ்லிம்களின் எண்ணிக்கை ஏறக்குறைய ஒரு மில்லியன் ஆகும். 2030 ஆம் ஆண்டு வரை அதாவது அடுத்த 20 ஆண்டுகளில் இந்த எண்ணிக்கையில் 80 அல்லது 85 சதவிகிதம் அதிகரிப்பு ஏற்பட்டு அது 2 மில்லியன்கள் வரை எட்டி விடும் என்று கருதப்படுகிறது. இன்றிலிருந்து 30 வருடங்களுக்கு முன் சில ஆயிரங்களாக இவர்கள் இருந்தனர். இப்போது இந்த எண்ணிக்கை ஒரு மில்லியன் ஆகிவிட்டது.

இந்த எண்ணிக்கையில் பெரும்பாலார் வெளிநாடுகளிலிருந்து வந்திருப்பவர்கள் ஆவர். வட ஆப்பிரிக்கா, மொரோக்கோ, அல்ஜீரியா போன்ற நாடுகளிலிருந்து வந்துள்ளனர். இவர்களில் பழைய இஸ்லாமிய கோத்திரங்களைச் சார்ந்தவர்களும் உள்ளனர் என்று கூறப்படுகிறது. இவர்கள் மிக நீண்ட காலமாக தங்களது இஸ்லாத்தைப் பாதுகாத்து வந்துள்ளனர். இன்றிலிருந்து ஏறக்குறைய 700 வருடங்களுக்கு முன் முஸ்லிம்களாக இருந்த இவர்கள் வலுக்கட்டாயமாக கிறிஸ்தவர்களாக்கப்பட்டனர். அவர்களிலிருந்தும் ஆயிரக்கணக்கில் மக்கள் மீண்டும் இஸ்லாத்தை தழுவியுள்ளனர். அதாவது அந்த கோத்திரங்களில் இருந்தும் குடும்பங்களிலிருந்தும் மக்கள் மீண்டும் இஸ்லாத்தை தழுவியுள்ளனர். இவர்கள் பலவந்தமாக கிறிஸ்தவர்களாக்கப்பட்டனர். அல்லது இவர்களது பிள்ளைகள் கிறிஸ்தவர்களாக்கப்பட்டனர்.

ஸ்பெயினில் இஸ்லாம் மீண்டும் தென்பட்டாலும் கூட இப்போது அல்லாஹ்வின் அருளால் முஸ்லிம்கள் போதுமான எண்ணிக்கையில் இருப்பது தெரிய வருகிறது. ஆனால் ஏற்கனவே நான் கூறியது போன்று இதன் தொடக்கம் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மூலமாகவே ஏற்பட்டது. ஆனால் முஹ்மதிய மஸீஹின் அடிமைகள் தங்களுக்கு இருக்கும் முக்கியத்துவத்தைப் புரிந்தவாறு இதன் பக்கம் கவனம் செலுத்தியவாறு இஸ்லாத்தின் அழகிய போதனையை இங்குள்ள ஒவ்வொரு நபருக்கும் எட்ட வைப்பதற்கு முயற்சி செய்யும் போது தான் உண்மையான இஸ்லாம் அங்கு தென்படும்.

ஒருவேளை நான் கூறும் விசயங்களைக் கேட்டு உங்களில் சிலர் இவ்வாறு கூறலாம். அவநம்பிக்கையுடைய எண்ணங்களைக் கொண்ட சிலர் இருக்கின்றனர். அதாவது அஹ்மதிகள் மிகக் குறைவான எண்ணிக்கையில் தான் இங்கு உள்ளனர். அப்படி இருக்கும் போது எல்லா இடங்களிலும் ஒவ்வொரு நபருக்கும் இந்த தூதுச் செய்தியை நாம் எப்படி எட்ட வைக்க முடியும்? என்று அவர்கள் கேட்கலாம்.

ஆனால் ஒரு உறுதிப்பாட்டுடனும், தைரியத்துடனும் செயல்பட்டால் எவ்வளவு எண்ணிக்கையில் நாம் இருக்கின்றோமோ அந்த எண்ணிக்கையில் இருந்தவாறே அஹ்மதிய்யத் அதாவது உண்மை இஸ்லாத்தின் தூதுச் செய்தியை அனைவருக்கும் எட்ட வைக்க முடியும். இதற்காக மீண்டும் மீண்டும் கூறிய பிறகும்கூட திட்டம் தீட்டப்படவில்லை; முயற்சிகள் செய்யப்படவில்லை. இதன் காரணமாக நாம் பெற வேண்டிய குறிக்கோள்களை நாம் பெற முடியவில்லை. எந்தத் திட்டங்களைத் தலைமையகம் வழங்கியதோ அல்லது நான் வழங்கினேனோ அல்லது எனக்கு முன்னர் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் வழங்கினார்களோ அவை செயல்படுத்தப்படவில்லை.

மஸ்ஜிது பசாரத் எத்தகைய இடத்தில் இருக்கின்றது என்றால் அங்கிருந்து குர்துபா மற்றும் அடுத்துள்ள பகுதிகளுக்கு செல்பவர்களை நாம் பார்க்க முடியும். முற்றிலும் மோட்டார்வேயில் அது அமைந்திருக்கின்றது. எனவே அறிமுகம் செய்து வைப்பதற்காக ஏதாவதொரு வழியை நாம் ஏற்படுத்தினால் பல மக்கள் வரை இந்த அறிமுகம் எட்டிவிடும். நல்ல முறையில் பணி செய்கின்ற பல ஜமாஅத்துகளும் குறைவான எண்ணிக்கையில் இருந்தும் கூட வழக்கத்திற்கு மாற்றமாக சிறந்த முறையில் அஹ்மதிய்யா ஜமாஅத்தை அறிமுகம் செய்து வைக்கும் பணியைச் செய்துள்ளது. பிரசுரம் மூலமாக இஸ்லாம் மற்றும் ஜமாஅத் பற்றிய அறிமுகத்தை மிகவும் விரிவான முறையில் அதிகமாக எண்ணிக்கையில் மக்களுக்கு எட்ட வைத்துள்ளனர். பெட்ரோபேடில் உள்ள பள்ளிவாசலை மற்ற மக்களும் பார்க்க வருகின்றனர். சில ரிப்போர்ட்டுகளில் இதுபற்றி குறிப்பிடப்பட்டிருக்கின்றது. சில குழுக்களும் வருகின்றன. ஆனால் உணர்வுடனும் ஆர்வத்துடனும் இந்தப் பணி நடக்கும் என்றால், அதிகமான பள்ளிவாசல்கள் இருக்கின்ற நிலையில் இந்தப் பகுதியில் மிகவும் அதிகமாக இஸ்லாத்தை நாம் அறிமுகம் செய்திருக்க முடியும். மற்ற முஸ்லிம் பிரிவினரிடத்தில் முறையான அமைப்பு இல்லாதிருந்தும் கூட பலவந்தமாக கிறிஸ்தவத்திற்கு தள்ளப்பட்ட ஸ்பெயினினுள்ள பழைய முஸ்லிம் குடும்பங்களின் சந்ததிகளிலிருந்தும் ஏறக்குறைய 20000 பேரை மீண்டும் இஸ்லாத்திற்குக் கொண்டு வர முடிகின்றது என்றால், உண்மையான இஸ்லாத்தில் இருக்கின்ற நம்முடைய தப்லீகின் மூலம் ஏன் பெரும் எண்ணிக்கையில் இந்த மக்கள் இஸ்லாத்தின் மடியில் வந்து அமர முடியாது? நாம் மீண்டும் நீடிப்பதற்கான வழியை ஸ்பெயினில் திறந்தோம். ஆனால் அந்த வழியை ஓர் உறுதிப்பாட்டுடனும், உணர்வுடனும் நாம் பயன்படுத்தவில்லை. மற்றவர்கள் அதிலிருந்தும் பலனைப் பெற்றனர்.

எனவே இப்போதும் நேரம் இருக்கின்றது. ஸ்பெயினில் வசிக்கின்ற அஹ்மதிகளும், ஒவ்வொரு வட்டத்திலுள்ள பொறுப்பாளர்களும் ஒவ்வொரு அமைப்பின் பொறுப்பாளர்களும் தங்கள் பொறுப்புகளை உணர வேண்டும். அவர்களே தங்கள் இலக்கை நிர்ணயித்தவாறு அதைப் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். எத்தகைய அழகிய உண்மையான இஸ்லாத்தை நாம் எடுத்துக் கூறுகின்றோமோ அது இன்று உலகின் கவனத்திற்குக் காரணமாக இருக்கின்றது. இஸ்லாத்திலிருந்தும் பலவந்தமாக கிறிஸ்துவர்களாக மாற்றப்பட்ட இந்தப் பழைய கோத்திரத்தைச் சார்ந்தவர்களிடம் நாம் உங்களது மூதாதையர்களின் அநீதிக்கு பழிவாங்குவதற்கான நேரம் இப்போது வந்து விட்டது என்று கூற வேண்டும். ஆனால் பலவந்தமாகவும் அநீதியாகவும் நாம் பழிவாங்கக் கூடாது. இஸ்லாத்தின் போதனை லா இக்ராஹ ஃபித்தீன் – மார்க்கத்தில் எவ்வித பலவந்தமுமில்லை (2:257) என்ற போதனையாகும். இதில் எவ்வித வலுக்கட்டாயமாக நடந்து கொள்ளுதல் இருக்கக் கூடாது. உங்கள் மீது எவர்கள் பலவந்தமாக நடந்து கொண்டனரோ இது ஒருவேளை அவர்ளுடைய போதனையாக இருக்கலாம். ஆனால் இது இஸ்லாத்தின் போதனை அல்ல. ஒரு சமுதாயத்தின் மீது அநீதி இழைத்தவாறு அதை பழிவாங்குங்கள் என்று இஸ்லாம் கூறவில்லை. அல்லாஹ் கூறுகின்றான்: ஒரு சமுதாயத்தின் மீதுள்ள பகைமை நீதியுடன் நடந்து கொள்வதிலிருந்தும் உங்களை தடுக்க வேண்டாம்.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

اِعْدِلُوْا ۗ هُوَ اَقْرَبُ لِلتَّقْوٰى ۖ وَاتَّقُوا اللّٰهَ ۗ

நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். அது இறையச்சத்திற்கு மிகவும் நெருக்கமானதாகும். அல்லாஹ்வின் மீதுள்ள தக்வாவைப் பேணுங்கள். தக்வாதான் உங்களுக்கு அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்றுத் தரும். ஏனென்றால் அல்லாஹ் தக்வாவை மேற்கொள்பவர்கள் மீது நேசம் வைத்துள்ளான்.

இங்கு பகைமை பற்றிய கேள்வியே எழாது. இங்கு அவர்கள் நம்முடன் இருந்து வரும் சமுதாயத்தினர் ஆவர். எனவே நம்முடன் இருக்கின்ற சமுதாயத்தினருடன் அன்புடனும் நேசத்துடனும் இந்த தூதுச் செய்தியை எட்ட வைக்க வேண்டும். எனவே நாம் இவர்களிடம் கூற வேண்டும். முதலில் நீங்கள் இஸ்லாத்தின் அழகிய போதனைக்கேற்ப நடக்க வேண்டும். பிறகு இந்த அழகிய போதனையின் மூலமாக இங்குள்ள ஒவ்வொருவரது உள்ளத்தையும் வெல்வதன் மூலம் நீங்கள் அவர்களை பழிவாங்குங்கள். எந்த உள்ளங்களிலிருந்தும் பலவந்தமாக அல்லது பேராசையூட்டி அல்லது அச்சத்தின் காரணமாக லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்பதன் மீதுள்ள நேசம் வெளியேற்றப்பட்டு விட்டதோ மேலும் வலுக்கட்டாயமாக இறைவனுக்கு இணையாக ஆக்குவதற்கான போதனை வழங்கப்பட்டதோ அப்படிப்பட்டவர்களது உள்ளங்களில் ஏக இறைவனின் மீதும் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மீதும் உள்ள அன்பை உருவாக்குங்கள் என்று நீங்கள் இவர்களிடம் கூற வேண்டும். அந்த இறைவன் மீதுள்ள அன்பை உருவாக்குங்கள். அவனது கருணை எல்லாப் பொருள்களையும் சூழ்ந்துள்ளது. மேலும் அந்தத் தூதர் மீதுள்ள அன்பை உருவாக்குங்கள். அவர்கள் ரஹ்மத்துல் லில் ஆலமீன் ஆக அகிலத்திற்கு அருட்கொடையாக வந்தவர்கள் ஆவார்கள்.

எங்கு நாம் பொதுவாக தப்லீக் செய்து இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைக்கின்றோமோ அங்கு அப்படிப்பட்ட கோத்திரத்தைச் சார்ந்தவர்களையும் தேடிப் பாருங்கள். பிறகு அவர்களிடம் அவர்களது அசல் மார்க்கத்தின் மீதுள்ள அன்பை புதிதாக உருவாக்கி அவர்களை வெற்றிகரமான பிரச்சாரகர்களாக ஆக்கி விடுங்கள். நான் ஏற்கனவே கூறியபடி வேலன்ஸியாவின் வரலாற்றுச் சிறப்புமிக்க முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டவாறு நான் இங்கு பள்ளிவாசல் கட்டுவதற்கு முன்னுரிமை வழங்கினேன். ஏனென்றால் அநீதியிழைத்த அரசர் ஒருவரும் ராணி ஒருத்தியும் ஸ்பெயினில் வலுக்கட்டாயமாக முஸ்லிம்களை கிறிஸ்தவர்களாக்க ஆரம்பித்த போது வேலன்ஸியா அந்த காலத்தில் கூட எத்தகைய பகுதியாக இருந்ததென்றால் மற்றவர்கள் முஸ்லிம்கள் மீது தீமையான முறையில் நடந்து கொண்ட பிறகும் கூட அங்கு அரபி பேசப்பட்டு வந்தது. இஸ்லாமிய சடங்குகளும், மரபுகளும் நிலைநாட்டப்பட்டன. செயலளவில் முஸ்லிம்கள் அங்கு இறைவணக்கங்களை நிறைவேற்றி வந்தனர். பொதுவான இஸ்லாமிய போதனைகளை அவர்கள் பின்பற்றி அவற்றை நிலைநிறுத்தி வந்தனர். ஆனால் மற்ற

பகுதிகளில் முஸ்லிம்கள் பெரும் பிரிவாக இருந்து வந்த போதிலும் இஸ்லாம் தெளிவாக அவர்களிடமிருந்து வெளிப்படும் வகையிலுள்ள எந்தவொரு செயலையும் அவர்கள் செய்யாமல்தான் இருந்து வந்தனர். இதன் விளைவாகவே 17வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் முஸ்லிம்களை அல்லது எவர்களது குடும்பத்தினர் முதலிலேயே முஸ்லிம்களா இருந்தனரோ அவர்களை ஸ்பெயினிலிருந்தும் வெளியேற்றுவதற்கான ஏற்பாட்டை அரசன் செய்ய ஆரம்பித்த போது அவரது இடத்தை முதலில் அவர் வேலன்ஸியாவில் இருந்து தான் ஆரம்பித்தான். ஏனென்றால் இங்கு முஸ்லிம்கள் தங்கள் மார்க்கத்தில் நிலைநின்றவாறு அதற்கேற்ப செயல்பட்டும் வந்தனர். அல்லது எந்த அளவு செயல்பட முடியுமோ அந்த அளவு செயல்பட முயற்சி செய்தனர். பொருளாதார ரீதியாக முஸ்லிம்களின் நிலை இங்கு மிகவும் பலவீனமாக இருந்தது. அவர்களை பெரும்பெரும் நகரங்களிலிருந்து வெளியேற்றி அக்கம்பக்கத்திலுள்ள பகுதிகளிலுள்ள நகரங்களில் அவர்களை குடியமர்த்தினர். மிகச் சாதாரணமான சொத்துக்கள் அவர்களிடம் இருந்தன. அவ்வாறிருந்தும் ஏழ்மை இருந்தது. இவ்வாறெல்லாம் இருந்தும் கூட இவர்களுக்கு இஸ்லாத்துடன் தொடர்பிருந்தது.

எவ்வாறிருப்பினும், பலதரப்பட்ட இராணுவத்தினர் இங்கு வந்திருந்தனர். இத்தாலி இராணுவமும் இங்கு வந்தது. அது இவர்களுக்கு கொடுமை இழைத்தது. தீர்ப்பிற்கேற்ப இந்த கொடுமைகள் இழைக்கப்பட்ட பிறகு இவர்களில் பருவ வயதை அடைந்தவர்களை நாடுகடத்தினர். அவர்களது குழந்தைகளை கிறிஸ்தவர்களிடம் ஒப்படைத்தனர். இவர்கள் இந்த குழந்தைகளை தங்களது வீட்டில் வைத்து வளர்த்து வந்தனர். தங்களது குழந்தைகள் போல் அல்லாமல் வேலை செய்பவர்களுடனும் அடிமைகளுடனும் நடந்து கொள்வது போன்று அந்த குழந்தைகளுடன் நடந்து கொண்டனர். எந்த குழந்தைகளிடமிருந்து இஸ்லாம் பிடுங்கப்பட்டு விட்டதோ, எந்த குழந்தைகள் முஸ்லிம்களின் வீட்டில் பிறந்திருந்ததோ மேலும் முஸ்லிம்களாகவே இருந்தனரோ அவர்களை அவர்களது விருப்பத்திற்கும் அவர்களது தாயின் விருப்பத்திற்கும் எதிராக ஏக இறைவனை வணங்குவதிலிருந்தும் அவர்கள் தடுத்து நிறுத்தினார்கள். அதற்குப் பதிலாக அவர்கள் திரித்துவக் கொள்கையை ஏற்க வேண்டும் என்று கூறி பலவந்தமாக அவ்வாறு செய்ய வைத்தனர். இந்தப் பிள்ளைகளின் சந்ததிகளை மீண்டும் ஏக இறைவனை வணங்குபவர்களாக மாற்றுவது நமது பணியாகும். அவர்களை மட்டுமல்ல. மாறாக இங்கு வசிக்கின்ற ஒவ்வொரு நபரையும் நாம் இவ்வாறு மாற்ற வேண்டும். மனித இனத்தின் மீது அன்பு இருப்பதால் நமக்கு இவர்கள் மீது அன்பு இருக்கின்றது. இங்கு இருக்கின்ற ஒவ்வொரு குடிமகன் மீதும் நமக்கு அன்பு இருக்கின்றது. ஏனென்றால் நாம் மனித இனத்தை நேசிப்பவர்களாக இருக்கின்றோம். மனித இனத்தின் மீதுள்ள நேசத்தின் காரணமாக நாம் விரும்புவதை நாம் அவர்களுக்காகவும் விரும்புகின்றோம். இந்த மக்களை இதன் காரணமாக ஏக இறைவனை வணங்குபவர்களாக உருவாக்கி தமது உலகையும், மறுமையையும் சரி செய்து கொள்பவர்களாக இவர்களை ஆக்குங்கள். குறிப்பாக இந்தப் பகுதியில் இதற்கான முயற்சியைச் செய்து வாருங்கள். இங்கு இந்த மாநிலத்தில் எல்லாவற்றையும் விட அதிகமாக மிக நீண்ட காலம் வரை உண்மையான இஸ்லாத்தை நிலைநாட்டுவதற்கான முயற்சி செய்யப்பட்டிருந்தது. இந்தப் பகுதியில் வாழ்ந்த முஸ்லிம்கள் 700 வருடங்களுக்கு முன்னர் வெளியேற்றப்பட்டதாக நம்பப்படவில்லை. மாறாக எல்லாரையும் விட கடைசியில் தான் நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பு தான் இங்கிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டனர். அல்லது முஸ்லிம்களின் தலைமுறையை அழிப்பதற்கு முயற்சி செய்யப்பட்டு வந்தது என்றே நம்பப்படுகிறது. இங்கு பல நூற்றாண்டுகளாக முஸ்லிம் அரசாங்கம் நிலைத்திருந்த பிறகும் அதன் வீழ்ச்சியானது முஸ்லிம்களின் பேராசை மற்றும் தந்திரங்கள் ஆகியவற்றின் விளைவாகவே ஏற்பட்டது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. பெயரளவில் இருந்த கிலாஃபத்துடனும் பற்றுடனும் நம்பிக்கையுடனும் மக்கள் நடந்து கொள்ளவில்லை. கலீஃபாவோ அல்லது அரசரோ தமது பொறுப்பை நிறைவேற்றவில்லை. அவர்களுடன் இருந்த முக்கியமான நபர்களும் செல்வந்தர்களும் தங்களது உரிமையை செலுத்தவில்லை. பிறகு இவர்களில் ஒவ்வொருவரும் தத்தமது சிறு சிறு பள்ளிவாசல்களை உருவாக்கிக் கொண்டனர். இவ்வாறான பள்ளிவாசல்களை உருவாக்கி தமது அரசாட்சயை நிலைநிறுத்தவே அவர்கள் முயன்றனர். பிறகு இதன் விளைவானது இப்படிப்பட்ட சுயநல நோக்கங்கள் கொண்ட பணிகளுக்கான விளைவு எப்படி வெளிப்படுமோ அவ்வாறே வெளிப்பட்டது. ஆனால் காத்தமுல் குலஃபாவாக இருக்கின்ற

முஹம்மதிய மஸீஹ் தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நேர்வழி பெற்ற கிலாஃபத்திற்குப் பிறகு அதனை உண்மையான முறையில் மீண்டும் நிலைநாட்டக்கூடியவராக இருக்கின்றார். அந்த மஸீஹிற்குப் பிறகு மீண்டும் கிலாஃபத்தின் அமைப்பு நீடித்திருக்கின்றது. இழந்துபோன இந்த மகிமையை மீண்டும் இந்தப் பகுதியில் நிலைபெறச் செய்வது இந்த கிலாஃபத்தை ஏற்றுக் கொண்டவர்களது பணியாக இருக்கின்றது. அவர்கள் உலகிற்கு லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்விலுள்ள உண்மையை தெரியப்படுத்த வேண்டும். அதன் உண்மைத் தன்மையை உலகிற்கு எடுத்துக் கூற வேண்டும்.

அல்லாஹ் இந்தப் பகுதியில் தனது பள்ளிவாசலைக் கட்டுவதற்கான நல்வாய்ப்பை நமக்கு வழங்கியுள்ளான். அதற்கான இடமும் அல்லாஹ்வின் அருளால் மிகவும் பொருத்தமான இடத்தில் கிடைத்திருக்கின்றது. இந்தப் பள்ளிவாசலும் மோட்டார்வேயிலிருந்து தெரிய வருகிறது. முற்றிலும் மோட்டார்வேயிற்கு மேலே இது இருக்கின்றது. ஆனால் நகரின் புதிய குடியிருப்புப் பகுதியிலும் இது இருக்கின்றது. நல்ல மக்கள் வாழும் பகுதியாக இது இருக்கின்றது. அண்டை அயலாரும் நல்லவர்களாக இருக்கின்றனர். அல்லாஹ் நல்ல அண்டை வீட்டுக்காரர்களை வழங்கியுள்ளான். இதுவும் அவனது பேருபகாரமாகும். எனவே இந்த சந்தர்ப்பத்திலிருந்தும் நாம் பலன்பெற வேண்டும். ஸ்பெயினின் இன்னொரு நகரத்தில் நமது இன்னொரு பள்ளிவாசல் கட்டப்பட்டு விட்டது என்று நினைத்து பள்ளிவாசலைக் கட்டியதில் மட்டும் நீங்கள் மகிழ்ச்சி அடைந்து விட வேண்டாம். உங்களது நிலைமைகள் மீதும் உங்களது பார்வையைச் செலுத்த வேண்டும். உங்களது இறைவணக்கங்கள் மீதும் உங்கள் பார்வையைச் செலுத்த வேண்டும். உங்களது பொறுப்புகள் மீதும் பார்வையைச் செலுத்த வேண்டும்.

நான் ஓதிய இவ்வசனங்களில் அல்லாஹ்வின் வீட்டைக் கட்டிய பிறகு அதற்கான உரிமையைச் செலுத்துவது பற்றி ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களும், ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்களும் ஓர் அழகிய வழிமுறையை நமக்கு கூறியுள்ளார்கள். அத்துடன் உரிமையைச் செலுத்துவதற்காக துஆ செய்யும் வழிமுறையை எடுத்துக்கூறி அதன் பக்கம் நமக்கு கவனமூட்டியுள்ளனர். இதை நாம் சிந்திக்க வேண்டியது அவசியமானதாகும். அதன் மூலம் தலைமுறை தலைமுறையாக அல்லாஹ்வின் வீட்டிற்குரிய உரிமையைச் செலுத்தக் கூடியவர்கள் நம்மில் உருவாகிக் கொண்டே செல்ல வேண்டும்.

அல்லாஹ் கூறுகின்றான்: அவர்கள் இறை இல்லமான கஃபாவின் அடித்தளங்களை உயர்த்திய சமயத்தில் அவர்கள் இந்த துஆவை செய்தார்கள்.

رَبَّنَا تَقَبَّلْ مِنَّا ۖ إِنَّكَ أَنْتَ السَّمِيعُ الْعَلِيمُ ۝

இது உண்மையில் அல்லாஹ்வைச் சார்ந்திருப்பவர்களின் மகிமையாகும். எல்லாரையும் விட அதிகமாக நபிமார்கள் தான் அல்லாஹ்வுக்கு மிகவும் நெருக்கமானவர்களாகவும் அல்லாஹ்வை சார்ந்தவர்களாகவும் இருக்கின்றனர். பல வருடங்களாக அவர்கள் தியாகங்களைச் செய்கின்றனர். தந்தையும் தியாகம் செய்கின்றார். மகனும் தியாகம் செய்கின்றார். மனைவியும் தியாகம் செய்கின்றார். ஆனால் நாங்கள் தியாகம் செய்து இத்தனை காலக்கட்டம் கழிந்து விட்டது. இப்போது நாங்கள் உனது இந்த வீட்டைக் கட்டுகிறோம். உனக்காக இதைக் கட்டுகிறோம். நீ கூறியதால் கட்டுகிறோம். எனவே எங்களது ஒவ்வொரு தியாகத்தையும் நீ ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற உரிமை எங்களுக்கு இருக்கின்றது. அவற்றை ஏற்றுக் கொண்டு எங்களுக்கு எளிதான நிலைமையையும் இன்பமான நிலைமையையும் ஏற்படுத்துவாயாக! என்றெல்லாம் அவர்கள் கூறவில்லை. அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இந்த வழக்கம் இல்லை. ஆனால் மற்ற முஸ்லிம்களில் இந்த வழக்கம் இருந்து வருகிறது. அதாவது சிறிய தியாகம் செய்தாலும் அந்த தியாகத்தைச் செய்த பிறகு அது அறிவிக்கப்பட வேண்டும் என்பதற்காக முயற்சி செய்யப்படுகின்றது. ஒரு ரூபாய், இரண்டு ரூபாய், நான்கு ரூபாய் கொடுத்து விட்டு பிறகு அதுபற்றி பள்ளிவாசல்களில் அறிவிக்கப்படுகிறது. பெரிய தியாகத்தைச் செய்து விட்டால் அதில் மிகவும் அதிகமாக பெருமை கொள்கின்றனர். ஆனால் இந்த இரண்டு நபிமார்கள் மூலமாகவும் எந்த முன்மாதிரியை அல்லாஹ் நம் முன்னால் எடுத்து வைத்திருக்கின்றானோ அது எப்படிப்பட்டதென்றால் மகன் இறைவனுக்காக அறுக்கப்படுவதற்குத் தயாராக இருக்கின்றார். தந்தை மகனை அல்லாஹ்வுக்காக அறுக்க தயாராக இருக்கின்றார். இவை எல்லாமே மகன் சிறிய

வயதில் இருக்கும் போது நடக்கின்றது. அதுவும் முதிர்ந்த வயதில் இந்த சந்ததி அவருக்கு கிடைத்திருக்கின்றது. பிறகு தியாகத்தின் தரம் மேலும் வளர்ச்சி அடைகின்றது. ஒரு நீண்ட காலம் வரை மகனையும் மனைவியையும் மக்கள் குடி பெறாத ஓரிடத்தில் தியாகங்கள் செய்வதற்காக விட்டு விடுகின்றார்கள். பசி, தாகம் ஆகியவற்றின் காரணமாக தாயும் மகனும் வாழ்க்கையையே இழந்துவிடக் கூடிய சாத்தியக்கூறுகளும் இருந்தன. பிறகு அந்த நேரம் வருகிறது. அல்லாஹ் தாய், மகன் ஆகியோரது தியாகங்களை ஏற்றுக் கொள்கின்றான். இதற்கு முன் அவர்களுக்கு தேவையான பொருள்கள் இல்லாமல் இருந்ததால், இதற்குப் பிறகு அல்லாஹ் அவர்களுக்கு உண்பதற்கும் குடிப்பதற்கும் உரிய பொருள்களைக் கிடைக்கும்படி செய்கின்றான். பிறகு அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப இறை இல்லமான கஃபாவை கட்டும் பணி ஆரம்பமாகி விடுகின்றது. அதைக் கட்டுபவர்கள் இரண்டு நபர்கள் மட்டும் தான். அவர்கள் இந்த உடன்படிக்கையைச் செய்கின்றனர். இதைக் கட்டுவதுடன் நாம் திரும்பிச் செல்வதற்கான எல்லா வழிகளும் அடைக்கப்பட்டு விட்டன. இப்போது நமது நோக்கம் இறைவனது வீட்டை நிரப்புவதாகும். இங்கு எப்படிப்பட்ட மக்கள் கூட்டத்தால் இந்த இல்லம் நிரம்ப வேண்டும் என்றால் அது நம்பிக்கை கொண்டவர்களின் கூட்டத்தால் நிரம்ப வேண்டும். நல்லவர்களின் கூட்டமாக இருக்க வேண்டும். இறைவனை நினைவு கூர்பவர்களால் அது நிரம்ப வேண்டும். இறைவனை வணங்குவதற்குரிய உரிமையைச் செலுத்துபவர்கள் மூலமாக அது நிரம்ப வேண்டும். இறைவனை வணங்குவதில் அதன் இறுதி எல்லையை அடைந்தவர்கள் மூலம் அது நிரம்ப வேண்டும்.

ஆக, இத்தகைய மக்கள் தான் இறைவனின் கட்டளைக்கேற்ப இறைவனின் வீட்டை கட்டிக் கொண்டிருந்தனர். பணிவை மேற்கொள்வதிலும் அல்லாஹ்வின் மீதுள்ள அன்பிலும் அவர்களது நிலை எவ்வாறிருந்தது என்றால், அல்லாஹ்வே! நீ எங்களது இந்த தியாகத்தை இந்த முயற்சியை ஏற்றுக் கொள்வாயாக! என்று துஆ செய்கின்றனர். உனது குறிப்பான கருணையின் மூலம் எங்கள் மீது கருணை காட்டியவாறு இதனை ஏற்றுக் கொள்வாயாக! இந்த ஏற்றுக் கொள்ளும் தன்மையானது எங்களை மேலும் உனக்கு அருகில் கொண்டு வருபவையாக ஆகட்டும்!

தியாகம் செய்து விட்டு பிறகு பணிவுடன் அல்லாஹ்வின் முன்பு குனிந்தவாறு அந்த தியாகத்தை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுவதும் அதற்காக துஆ செய்வதும் ஆகிய இவையே நமக்கு பாடமாகும். இந்தக் கொள்கையை நாம் எப்போதும் எல்லா சமயங்களிலும் கண் முன் நிறுத்தி செயல்பட வேண்டும். இத்தகைய இப்ராஹீம் (அலை) மற்றும் இஸ்மாயீல் (அலை) ஆகியோரது சிந்தனையும் துஆவும் நமக்கு இதன் பக்கம் கவனமூட்டுகிறது. அதாவது நாம் இந்தக் காலத்தின் இப்ராஹீமுடன் தொடர்புடையவர்களாக இருக்கின்றோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முழுமையாகக் கீழ்படிந்து நடந்து அவர்கள் மீது பேரன்பும் அளவுகடந்த நேசமும் வைத்திருந்தன் காரணமாக அல்லாஹ் அவர்களை இந்தக் காலத்தின் இப்ராஹீமாக ஆக்கிவிட்டான். அவர் மார்க்கத்தை அதன் அசல் சுவர்களில் மீண்டும் நிலைத்திருக்கும்படி செய்தான். நாம் இதற்கு சாட்சியாக இருக்கின்றோம். நாம் நாள்தோறும் இந்தக் காட்சியைப் பார்க்கின்றோம். அவர் மார்க்கத்தை அதன் அசல் சுவர்களில் எப்படி நிலைத்திருக்கும்படி செய்துள்ளார் என்றால், எவராவது ஒருவர் அந்த மார்க்கத்திற்கேற்ப சரியாக செயல்படக்கூடியவராக இருந்தால் அவரது வாழ்க்கையில் ஒரு பெரும் மாற்றம் ஏற்பட்டு விடுகின்றது. இஸ்லாமிய மார்க்கத்தின் அழகை எந்த அளவு ஒளியமயமானதாக ஆக்கி அதனை எந்த அளவு மகத்துவமிக்கதாகவும் பொலிவு மிக்கதாகவும் அவர் காட்டினார் என்றால், நீங்கள் எடுத்துக் கூறுவதுதான் இஸ்லாம் என்றால், நாங்கள் இஸ்லாத்திற்கு எதிராக கூறிய சொற்களை திரும்பப் பெற்றுக் கொள்கிறோம் என்று முஸ்லிம் அல்லாதவர்களும் கூறியுள்ளனர்.

எனவே இன்று இந்த இப்ராஹீமின் மூலமாக இறை இல்லமான கஃபா கட்டப்படுவதற்கான நோக்கங்களும் நிறைவேறி விட்டன. மேலும் இஸ்லாத்தின் அழகிய போதனைகளின் ஒளியும் உலகில் வெளிப்படுகின்றது. மேலும் இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகவே உலகில் நம்மால் கட்டப்படுகின்ற ஒவ்வொரு பள்ளிவாசலும் சாட்சியாக இருக்கின்றது. அவ்வாறு இருக்கவும் வேண்டும். இன்று பைத்துர் ரஹ்மான் என்று பெயர் வைக்கப்பட்டுள்ள இந்த பள்ளிவாசலும் இந்த நோக்கத்தைப் பெறுவதற்கான வழியாக ஆவதையே வெளிப்படுத்திக் காட்டிக் கொண்டிருக்கின்றது.

எனவே இந்த பள்ளிவாசல் எங்கு நாம் பணிவுடன் அல்லாஹ்வின் முன்பு குனிந்தவாறு அதனை கட்டுவதன் நோக்கத்தை நிறைவடையச் செய்வதன்பக்கம் கவனமூட்டுகின்றோமோ அங்கு நாம் நமது உடன்படிக்கையை நிறைவேற்ற வேண்டும். நாம், நமது பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும் என்பதன் பக்கம் கவனமூட்டக்கூடியதாக இருக்கின்றது. நாம் நமது உடன்படிக்கைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றினால் தான் நாம் நமது நோக்கங்களைப் பெற முடியும். நாம் இந்த அறிவிப்பைச் செய்கின்றோம்.

முஹம்மதிய மஸீஹே! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரே! நாங்கள் உங்களுடன் செய்துள்ள பைஅத் உடன்படிக்கையில் உலகத்தை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் கொடுப்போம். ஏகத்துவத்தை உலகில் பரப்புவோம் என்று கூறியுள்ளோம்.

இந்தப் பள்ளிவாசலைக் கட்டியதன் மூலம் உலகிற்கு இஸ்லாத்தின் மீது கவனம் ஏற்படும் போது தப்லீகிற்கான வழிகள் திறக்கும் போது அதற்கான உரிமையைச் செலுத்தியவாறு எங்களது எல்லா தகுதிகளையும் வெளிக்கொணர்ந்தவாறு தவ்ஹீதை நிலைநாட்டுதல், நாட்டிலுள்ள குடிமக்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது கொடியின் கீழ் கொண்டு வருதல் ஆகியவை எங்களது முதல் கடமையாக இருக்கும் இன்சா அல்லாஹ்.

இறைவா! நன்கு கேட்பவனும் நன்கு அறிந்தவனுமாகிய இறைவா! எங்களது துஆக்களை கேட்பாயாக! எங்களுக்கு எங்களது கடமைகளை நிறைவேற்றுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவாயாக! இந்தப் பள்ளிவாசல் உனது வீட்டின் வடிவத்தைப் பின்பற்றியவாறு கட்டப்பட்டுள்ளது. உனது வீட்டைக் கட்டுவதற்கு எந்த நோக்கங்கள் இருந்தனவோ அதே நோக்கங்களைப் பெறுவதற்குரிய ஒரு வழியாக இந்த பள்ளிவாசலை ஆக்குவாயாக! நீ நன்கு அறிபவனாவாய். நீ எங்களது பலவீனங்களையும் தகுதியற்ற நிலைமைகளையும் அறிந்திருக்கின்றாய். எனவே எங்களது துஆக்களைக் கேட்டவாறு எங்களது தகுதியற்ற நிலையிலிருந்தும் உனது பார்வையை விலக்கி வைத்தவாறு எங்களை இந்தப் பள்ளிவாசலைக் கட்டுவதற்கான நோக்கங்களை நிறைவேற்றுபவர்களாக ஆக்குவாயாக!

பள்ளிவாசலின் அழகும், பள்ளிவாசலில் விரிவான நிலையும் நாம் அதற்கான உரிமையை செலுத்துபவர்களாக ஆகும்போதுதான் நமக்கு பயன்தரக்கூடியதாக இருக்கும். இந்த உரிமையைச் செலுத்துவதற்காக எங்கு பள்ளிவாசல்களை நிரப்பி அல்லாஹ்வை வணங்குபவர்களாக நாம் ஆவோமேமா அங்கு அல்லாஹ்வின் அடியார்களின் உரிமையைச் செலுத்துபவர்களாகவும் நாம் ஆக வேண்டும். அன்பு, நேசம், சகோதரத்துவம் ஆகியவற்றை வளர்ச்சி அடையும்படி செய்பவர்களாக நாம் ஆக வேண்டும். அதன் மூலம் இஸ்லாத்தின் உண்மையான போதனையின் செயலளவிலான முன்மாதிரி நம்மிடமிருந்து வெளிப்பட வேண்டும். அதன் மூலம் மக்களின் கவனம் நம் பக்கம் இருக்க வேண்டும். அதன் மூலம் இஸ்லாத்தின் அழகிய போதனையை உலகம் புரிந்து கொள்ள முயற்சி செய்ய வேண்டும்.

அல்லாஹ்வே! நீ கேட்பவனாக இருக்கின்றாய்! எங்களது இந்த துஆவையும் கேட்பாயாக!

எனவே வெளிப்புற அழகை விட அதிகமாக இந்தப் பள்ளிவாசலை நிரப்புவதன் ஆன்மாவை அழகானதாக ஆக்கி எங்களுக்கு காட்டுவாயாக! இந்தப் பள்ளிவாசலைக் கட்டுவதற்கான ஆன்மா உண்மையான முறையில் நம்மில் உருவாகி விட்டால் இந்தப் பள்ளிவாசலைக் கட்டியதற்கான நோக்கங்களைப் பெற்றவர்களாக நாம் ஆகி விடுவோம்.

நான் ஏற்கனவே கூறியது போன்று இங்கு பல நூற்றாண்டுகளாக முஸ்லிம்களின் ஆட்சி இருந்து வந்தது. அப்போது பெரும் பெரும் அழகிய பள்ளிவாசல்களை முஸ்லிம்கள் கட்டினர். உதாரணமாக, குர்தபாவின் பள்ளிவாசல் இருக்கின்றது. அதைப் பார்த்து மனிதன் வியப்படைகின்றான். மற்ற இடங்களிலும் பள்ளிவாசல்கள் இருக்கின்றன. எங்கெல்லாம் முஸ்லிம்கள் வசித்து வந்தனரோ அங்கெல்லாம் பெரும் பெரும் பள்ளிவாசல்கள் உள்ளன. செவேலியா, கர்னாத்தா போன்ற இடங்களில் அவை உள்ளன. இஸ்லாத்தின் உண்மையான போதனைகளின் ஆன்மா இந்த பள்ளிவாசல்களுக்கு வருபவர்களிடம் இல்லாமல் ஆன போது ஏக இறைவனின்

பெயர் கூறப்பட்ட அதே இடங்கள் தகர்க்கப்பட்டன அல்லது இணை வைத்தலின் கூடாரங்களாக அவை ஆகி விட்டன. குர்தபாவின் பள்ளிவாசலைப் பாருங்கள். வியப்பாக இருக்கின்றது. மிக அழகிய வலுவான கட்டிடமாக அது இருக்கின்றது. பல நூற்றாண்டுகள் கழிந்த பிறகும் கூட அதன் அழகிலும் வலிமையிலும் சிறிதளவு கூட வித்தியாசம் தென்படவில்லை. ஆனால் துரதிஷ்டவசமாக இன்று அந்த கட்டிடங்கள் கிறித்தவ ஆலயங்களாக மாற்றப்பட்டு விட்டன. நான் ஏற்கனவே கூறியது போன்றே கட்டிடம் மட்டும் அசல் விசயமல்ல. அசல் விசயம் இந்த கட்டிடத்தில் வருபவர்கள் மற்றும் இங்கு தங்குபவர்கள் ஆகியோரிடமுள்ள ஆன்மாவாகும். முஸ்லிம்களில் அந்த ஆன்மா முடிந்து போனதும் பள்ளிவாசல்களும் மற்றவர்களது பிடியின் கீழ் சென்று விட்டன. எனவே இந்த பள்ளிவாசலின் மகத்துவத்தை நாம் நிலைநாட்ட வேண்டுமென்றால், நிச்சயமாக நாம் அதை நிலைநாட்டுவோம் இன்சா அல்லாஹ். பிறகு அதன் ஆன்மாவை நிலைநாட்ட நாம் முயற்சி செய்ய வேண்டும். இந்த முயற்சியை உழைப்புடன் நாம் செய்ய வேண்டும். அல்லாஹ்வின் முன்னால் இவ்வாறு துஆ செய்ய வேண்டும்.

அல்லாஹ்வே! பள்ளிவாசலின் ஆன்மாவை நிலைநாட்டக் கூடியவர்களை எப்போதும் நீ உருவாக்கிக் கொணடே இருப்பாயாக! அதன் மூலம் கியாமத் வரை இது தவ்ஹீதின் தலைமையகமாக இருக்க வேண்டும். தவ்ஹீதின் முழக்கங்கள் இங்கிருந்து உயர்த்தப்பட வேண்டும். இறைவனின் பார்வையில் நமது தியாகங்கள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். அப்போதுதான் உண்மையில் இந்த நோக்கங்களைப் பெற முடியும்.

பிறகு அடுத்து வரும் வசனங்களில் இந்த கண்ணியமிக்க நபிமார்கள் தங்களது துஆக்களை இறைவனது வீட்டை கட்டும் சமயத்தில் செய்கின்ற போது அவற்றை தங்களுக்காக மட்டும் ஒரு எல்லைக்குட்பட்டதாக வைத்துக் கொள்ளவில்லை. மாறாக அந்த துஆக்களை தங்களது சந்ததிகள் மற்றும் தலைமுறை வரை விரிவானதாக ஆக்கி விட்டனர். இதுதான் துஆவின் வழிமுறையாகும். இதுதான் முன்னேறுகின்ற மற்றும் தலைமுறை தலைமுறையாக வெற்றிகளைப் பெறுவதற்கான எண்ணமும் கவலையும் ஆகும். இந்த எண்ணமும் கவலையும் இருந்தால் பிறகு நமக்கு வெற்றிக்கு மேல் வெற்றி கிடைக்கும் இன்சா அல்லாஹுத்தஆலா.

எங்களது சந்ததிகளையும் நன்மைகளில் அவர்கள் நிலைத்திருக்கும்படி செய்வாயாக! என்ற இந்த துஆவின் மூலம் தான் இந்த வீட்டை நிரப்புவதற்கான நோக்கத்தை நாம் பெற முடியும்.

ஆக, இந்த சிந்தனையும் கவலையும் நமக்கு இருந்தால் நமக்கு வெற்றிகள் கிடைக்கும் இன்சா அல்லாஹுத்தஆலா. நாம் இந்த துஆவையும் செய்ய வேண்டும். அல்லாஹ் நமது சந்ததிகளையும் நன்மைகளில் நிலைத்திருக்கும்படி செய்வானாக! அதன் மூலம் இந்த வீட்டை நிரப்புவதன் குறிக்கோளை நாம் பெற்றுக் கொண்டே இருக்க வேண்டும். நான் ஏற்கனவே கூறியது போன்று அல்லாஹ்விற்குரிய உரிமைகளையும் அல்லாஹ்வின் அடியார்களுக்குள்ள உரிமைகளையும் செலுத்தக் கூடியவர்கள் நமது சந்ததிகளிலிருந்தும் உருவாகிக் கொண்டே இருக்கும் போதுதான் நமது தியாகங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். இறைவனை வணங்குபவர்கள் நமது தலைமுறையிலிருந்தும் உருவாகிக் கொண்டே செல்ல வேண்டும். அல்லாஹ் விரும்புவது போல் அவனை வணங்குபவர்களாக நாம் ஆக வேண்டும். நாம் துஆ செய்ய வேண்டும். அல்லாஹ்வே! நீயே இபாதத்திற்கான கட்டளையைப் பிறப்பித்துள்ளாய். அதற்கான வழிமுறையையும் கற்றுத் தந்துள்ளாய். நபிமார்களும் இந்த துஆவை செய்துள்ளனர். எங்களுக்கும் இந்த வழிமுறையைக் கற்றுத் தருவாயாக! வ அரினா மனாஸிகனா – எங்களுக்கு எங்களது இறைவணக்கங்கள் மற்றும் தியாகங்களுக்கான வழிமுறைகளைக் கற்றுத் தருவாயாக! இந்த துஆவை நாமும் செய்ய வேண்டியது அவசியமானதாகும். உண்மையில் இறைவணக்கங்கள் மற்றும் தியாகங்கள் ஆகியவற்றிற்கான வழிமுறைகளை அல்லாஹ்வின் வழிகாட்டல்கள் மூலமாகத்தான் புரிய முடியும். இதன் ஆன்மாவை அதன் ஆழம் வரை சென்று புரிந்து கொள்வது தொடர்பான அறிவு அல்லாஹ்வின் அருளால்தான் உருவாகின்றது. சந்தேகமின்றி தொழுகையும் இறைவணக்கத்தின் ஒரு வழிமுறையாகும். பள்ளிவாசல்களுக்கு மக்கள் வருகின்றனர். இபாதத் செய்கின்றனர். ஆனால் இதே தொழுகையாளிகள் பற்றி அல்லாஹ் அவர்களது தொழுகை அவர்களது முகத்தில் வீசி எறியப்படுகிறது. அது அவர்களின் அழிவிற்குக் காரணமாகி விடுகின்றது என்று கூறுகின்றான். அல்லாஹ்வின் அருளை வேண்டியவாறு அவனது பார்வையில் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய

தொழுகையை நாம் நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும். தொழுகை மட்டுமின்றி இறைவனைப் பெற்றுக் கொள்வதற்காக செய்யப்படுகின்ற ஒவ்வொரு செயலும் இபாதத் ஆகி விடுகின்றது. அது இறைவனது அடியார்களுக்குரிய உரிமையைச் செலுத்துவதாக இருந்தாலும் சரியே. எனவே இந்த ஆன்மாவைப் புரிந்து கொள்வது நமக்கு அவசியமானதாகும். இறைவணக்கத்தின் ஆன்மாவைப் புரிந்து தான் நாம் தவ்ஹீதின் தூதுச் செய்தியையும் பரப்ப முடியும் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். அதன் மூலம் நமது சந்ததிகளில் இந்த தூதுச் செய்தியை ஊடுருவும்படி செய்ய முடியும். அதற்காக எவ்வாறு ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் துஆ செய்துள்ளார்களோ அவ்வாறு நமது சந்ததிகளுக்கு மிகவும் துடியாய் துடித்து துஆ செய்ய வேண்டியது அவசியமானதாகும். அஹ்மதிகளாகிய நாம் நமது கூட்டங்களில் நாம் ஒவ்வொரு தியாகத்திற்காகவும் தயாராக இருக்கின்றோம் என்று உறுதிமொழியில் கூறுகின்றோம். இந்த உறுதிமொழியின் ஆன்மாவை நமது சந்ததிகளில் ஊத வேண்டியது அவசியமானதாகும். அதன் மூலம் மார்க்கத்தைப் பரப்புவதற்காக தியாகங்கள் செய்யக்கூடிய பிரிவினர் பிறந்து கொண்டே செல்ல வேண்டும்.

ஆனால் இதையும் நினைவில் கொள்ள வேண்டும். மாறும் நிலைமைகளுக்கேற்ப தியாகங்களின் வழிமுறையும் மாறிக் கொண்டே இருக்கும். இதுவும் இந்த வ அரினா மனாஸிகனா என்ற துஆவில் உள்ள ஒரு கருத்தாகும். ஸ்பெயினில் இதற்கு முன்னர் இஸ்லாத்திற்கு வந்த முஸ்லிம்கள் இஸ்லாத்திற்காக உதவிகளைச் செய்தனர். ஜிஹாதும் செய்தனர். நீதியை நிலைநாட்டினர். பிறகு அவர்கள் பரவிக் கொண்டே சென்றனர். அவர்கள் வாளினால் ஆன ஜிஹாதைச் செய்தனர் என்பதில் சந்தேகமில்லை. இன்றைய தியாகங்கள் தப்லீகின் ஜிஹாது மூலம் நடைபெறும். நூல்களைப் பரப்புவதற்காக பொருள் தியாகம் செய்தவாறு அது நடைபெறும். பள்ளிவாசல்லைக் கட்டுவதற்காக பொருள் தியாகங்கள் செய்தவாறு அது நடைபெறும். தியாகங்களின் நிலை, நிலைமைகளுக்கேற்ப மாறி விடுகின்றது. எங்களுக்கு தியாகங்களுக்கான வழிமுறையைக் கற்றுத் தருவாயாக! என்ற ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் இந்த துஆவை மாறி வரும் நிலைமைகளுக்கேற்ப உனது திருப்தியைப் பெறும் வகையிலுள்ள இறைவணக்கங்கள் மற்றும் தியாகங்களுக்கான வழிமுறைகளை எங்களுக்கு நீ கற்றுத் தருவாயாக! என்ற இந்த துஆவை திருக்குர்ஆன் பாதுகாத்து வைத்து அல்லாஹ் நமக்கு ஒரு அடிப்படையான வழிகாட்டலை வழங்கியுள்ளான். அதாவது நிலைமைகளுக்கேற்ப நாம் தியாகங்கள் செய்ய வேண்டும். எத்தகைய எவ்வகையைச் சார்ந்த நன்மையை நாம் செய்ய வேண்டும் என்றால், அது இறைவனின் திருப்தியைச் சேகரிக்கும் வகையில் இருக்க வேண்டும். எனவே தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருவரிடம் அவர் மிகச்சிறந்த நன்மை எது? என்று கேட்டதற்கு நீங்கள் தஹஜ்ஜுது தொழுது வாருங்கள என்று கூறினார்கள். இன்னொருவரிடம் உங்களுக்கு மிகச் சிறந்த நன்மை இறைவழியில் ஜிஹாது செய்வதாகும் என்று கூறினார்கள். எனவே, எவரிடம் எந்த நன்மை குறைவாக இருக்கின்றதோ அதுதான் அவருக்கு அவசியமானதாகும். அதுதான் அவருக்கு பெரிய நன்மையாகும். அதுவே அவருக்கு பொருத்தமான இபாதத்திற்குரிய வழிமுறையாகும். அதுவே அவருக்கு பொருத்தமான நிலையிலுள்ள தியாகமாகும்.

எனவே இந்த துஆவில் உங்களுக்காகவும் உங்களது சந்ததிகளுக்காகவும் எல்லா வகையான பலவீனங்களையும் அகற்றவும் இறைவனின் திருப்தியைப் பெறுவதற்கும் துஆ செய்வதன் பக்கம் மிகவும் வலியுறுத்திக் கூறப்பட்டிருக்கின்றது.

எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். மனிதன் ஒருபோதும் தமது முயற்சிகளால் இபாதத்தின் உயர்வான தரத்தைப் பெற முடியாது. அவ்வாறே தியாகத்தின் உயர் தரத்தையும் பெற முடியாது. எனவே வ துப் அலைனா தவ்பாவை ஏற்றுக் கொண்டவாறு எங்கள் பக்கம் திரும்புவாயாக! என்று துஆ கற்றுத் தரப்பட்டுள்ளது. எங்களது நன்மைகளை ஏற்றுக் கொள்வாயாக! அதன் மூலமாக நன்மைகளிலிருந்து நன்மை பிறந்து கொண்டே செல்ல வேண்டும். நன்மைகளின் அலை உருவாகி விட வேண்டும். தியாகங்களிலிருந்து தியாகம் பிறந்து கொண்டே செல்ல வேண்டும். உனது திருப்தியை விரும்பியவாறு உன்னை வணங்குபவர்களாக நாங்கள் இருக்க வேண்டும். வெளி வேசத்திற்காக அதை செய்பவர்களாக நாங்கள் இருக்கக் கூடாது. இத்தகைய இபாதத் நமது சிந்தனைகளில்

இருக்க வேண்டும். இந்த வழிமுறைக்கேற்ப நாம் நமது இறைவணக்கங்களையும் தியாகங்களையும் செய்தால் நாம் நற்பாக்கியம் பெற்றவர்களாக இருப்போம். எப்போதும் நமது தவறுகள், கவனக்குறைவுகள், வரம்பு மீறுதல் ஆகியவற்றிலிருந்தும் அல்லாஹ்வின் அடைக்கலத்தின் கீழ் வருபவர்களாக நாம் ஆவோமாக! நமது சந்ததிகளின் உள்ளங்களில் இறைவன் மீதுள்ள அன்பை உருவாக்குபவர்களாக நாம் ஆவோமாக! நமது உள்ளங்களில் இந்த அன்பு இருந்தால் தான் இதை நம்மால் செய்ய முடியும். அடியார்களுக்குரிய உரிமையைச் செலுத்துவதன் பக்கம் கவனம் செலுத்தக் கூடியவர்களாக நாம் இருக்க வேண்டும். கர்வத்தையும் அகங்காரத்தையும் கைவிடுபவர்களாக நாம் இருக்க வேண்டும். தொழுகைகளிலுள்ள சோம்பேறித்தனத்தை அகற்றுபவர்களாக இருக்க வேண்டும். நமக்கு நிறைவேற்றுவதற்குக் கஷ்டமாகத் தெரிகின்ற ஒவ்வொரு தொழுகையும் அதற்காக குறிப்பாக முயற்சி செய்து அதை தொழுபவர்களாக நாம் ஆக வேண்டும். ஜமாஅத்தான தொழுகையைத் தொழுவதில் நம்மிடம் சோம்பேறித்தனம் இருந்தால் தொழுகையை ஜமாஅத்தாக தொழுவதன் பக்கம் கவனம் செலுத்தக் கூடியவர்களாக நாம் ஆகிவிட வேண்டும். இதுவே நமது தியாகங்களாகும். எவர்கள் தாய் தந்தையருக்குரிய உரிமைகளைச் செலுத்தாமல் இருக்கின்றார்களோ அவர்கள் அவர்களுக்குரிய உரிமைகளைச் செலுத்துபவர்களாக ஆகிவிட வேண்டும். எவர்கள் சகோதர சகோதரிகள் மற்றும் உறவினர்களுக்குரிய உரிமைகளைச் செலுத்தாமல் இருக்கின்றார்களோ அவர்கள் அவர்களுக்குரிய உரிமையைச் செலுத்துபவர்களாக ஆகிவிட வேண்டும். அண்டை வீட்டுக்காரர்களுக்கும் அல்லாஹ் மகத்தான தகுதியை வழங்கியுள்ளான். அவர்களுக்குரிய உரிமையைச் செலுத்துபவர்களாக நாம் ஆகி விட வேண்டும். அண்டை வீட்டுக்காரர்களுடன் ஒவ்வொரு அஹ்மதியும் நடந்து கொள்ளும் விதமானது அவரை அஹ்மதிய்யத் அதாவது உண்மை இஸ்லாத்தின் பக்கம் ஈர்க்கக் கூடியதாக இருக்க வேண்டும். இந்த முயற்சியை ஒவ்வொரு அஹ்மதியும் செய்ய வேண்டும். சுருக்கமாக, ஒவ்வொரு நன்மையும் செய்தவாறு அதற்குரிய உரிமையைச் செலுத்துவதற்கு முயற்சி செய்தவாறு நன்மைகளைச் செய்பவராக நாம் மாறினால்தான் உண்மையான முறையில் நாம் அல்லாஹ்விடம், அல்லாஹ்வே! எங்கள் தவ்பாவை ஏற்றுக் கொள்வாயாக! எங்கள் மீது கருணை காட்டுவாயாக! என்று நம்மால் கூற முடியும். நாம் அல்லாஹ்வின் கருணையை வேண்டுபவர்களாக இருந்தால், மற்றவர்களையும் நாம் கருணையுடன் பார்க்க வேண்டும். அல்லாஹ்விடம் மட்டும் அவனது கருணையை அவனிடமிருந்து கேட்பவர்களாக இருந்து தங்களது வட்டத்திற்குள் கருணை காட்டாதவர்களாக நாம் இருந்துவிடக் கூடாது. எனவே பள்ளிவாசலுடன் ஒரு நம்பிக்கையாளர் உண்மையான முறையில் தொடர்பு வைத்திருந்தால் பிறகு நன்மைகளின் புதிய புதிய கதவுகள் அவருக்காக திறக்கப்படுகிறது. அதன் மூலம் அல்லாஹ்வின் மன்னிப்பு கிடைக்கும் புதிய புதிய வழிகள் வெளிப்படுகின்றது.

எனவே இன்று நமக்கு அல்லாஹ்விடமிருந்து கிடைத்துள்ள இந்தப் பள்ளிவாசல் இவற்றின் பக்கம் கவனமூட்டக் கூடியவையாக இருக்க வேண்டும். இதையே நாம் வெளிப்படுத்த வேண்டும். இந்தப் பள்ளிவாசலை இங்கு வசிப்பவர்களும் நிரப்ப வேண்டும். தங்களது பிள்ளைகள் மூலமாகவும் அதை நிரப்ப வேண்டும். இன்சா அல்லாஹ். இதற்குரிய உரிமையைச் செலுத்தியவாறு இதை நிரப்ப வேண்டும். பள்ளிவாசலுக்கு வருவது மட்டும் நோக்கமாக இருக்கக் கூடாது. மாறாக அதற்குரிய உரிமையைச் செலுத்துவது நோக்கமாக இருக்க வேண்டும். அல்லாஹ் பள்ளிவாசல்களுடன் தொடர்புடைய அந்த எல்லா அருள்களையும் பரக்கத்துகளையும் பெறக் கூடியவர்களாக நம்மை ஆக்குவானாக! அல்லாஹ் நமது தவ்பாவை ஏற்றுக் கொள்பவனாகவும் நமது தவறுகளை மன்னிப்பவனாகவும் இருப்பானாக!

**ஒரு ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உங்களது தவறுகளை அழித்து உங்களது தகுதிகளை உயர்த்தக் கூடிய ஒரு செயலைப் பற்றி கூறட்டுமா? என்று கேட்டார்கள். சஹாபாக்கள் கூறுங்கள் என்றார்கள். அதற்கு அவர்கள் உள்ளம் விரும்பாத நிலையிலும் முழுமையான முறையில் நன்றாக உளூ செய்வது; பள்ளிவாசல்களின் பக்கம் அதிகமாக நடந்து செல்வது; ஒரு தொழுகைக்குப் பிறகு அடுத்த தொழுகைக்காகக் காத்திருப்பது; இது ரிபாத் ஆகும்; ரிபாத் ஆகும்; ரிபாத் ஆகும். அதாவது இதுதான் எல்லைப் புறங்களைப் பாதுகாப்பதாகும். எல்லைப்

புறங்களில் குதிரைகளைக் கட்டுவதாகும். இதுதான் உங்களுக்கு ஜிஹாது ஆகும் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

நம்மில் ஒவ்வொருவரும் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டியது அவசியமானதாகும். இன்று நமது நஃப்ஸ்களுக்கு எதிராக ஜிஹாது செய்ய வேண்டியது அவசியமானதாகும். இந்தக் குறிக்கோள்களை நாம் அடைய வேண்டும். அல்லாஹ்வின் தூதுச் செய்தியை எட்ட வைக்கும் நோக்கமும் கூட ஒரு ஜிஹாது ஆகும். இதன் பக்கமும் நாம் கவனம் செலுத்த வேண்டும். அல்லாஹ்வின் உதவி இல்லாமல் நாம் வெற்றி பெற முடியாது. அல்லாஹ்வின் அருள் அவனது இபாதத்திற்குரிய உரிமையைச் செலுத்துவதன் மூலம் கிடைக்கும். எனவே உங்களது தொழுகைகளைப் பாதுகாத்தால் அவனது அருள்களைப் பெறக்கூடியவர்களாக நாம் ஆகி விடுவோம். நஃப்ஸின் ஜிஹாதாகவும் இறைவனின் தூதுச் செய்தியை எட்ட வைக்கின்ற ஜிஹாதாகவும் அந்த ஜிஹாதில் பங்கேற்பவர்களாகவும் நாம் இருப்போம்.

இன்றைய சமுதாயத்தில் மனிதனுக்கு எல்லாவற்றையும் விட அதிகமாக இந்த ஜிஹாது தான் தேவைப்படுகிறது. இந்த ஜிஹாது தான் நம்மை சமுதாயத்தின் தீமைகளிலிருந்து காப்பாற்றி இறைவன் முன்னால் நம்மைக் கொண்டு செல்லக் கூடியதாக இருக்கும். இறைவனின் திருப்தியைப் பெறக்கூடியதாக ஆக்கும். இந்த ஜிஹாது தான் நம்மையும் நமது சந்ததிகளையும் உலகின் அழுக்குகளிலிருந்தும் சுத்தமாகவும் தூய்மையாகவும் வைத்திருப்பவையாக ஆக்கும்!

அல்லாஹ் உங்கள் மீது செய்துள்ள இந்த அருட்கொடையிலிருந்தும் பயன் பெறுங்கள். மேலும் இந்தப் பள்ளிவாசலை முற்றிலும் இறைவனுக்காக ஆக்கி அவனை வணங்குவதன் மூலம் அதை அழகுபடுத்துங்கள். அதன் மூலம் அல்லாஹ்வின் அருள்களுக்கு நீங்கள் வாரிசாகி விட வேண்டும். இந்தப் பள்ளிவாசலை இந்த நோக்கங்களை நிறைவு செய்யக் கூடியதாக அல்லாஹ் ஆக்குவானாக! நாம் நமது பொறுப்புகளை நிறைவேற்றுபவர்களாக ஆவோமாக!

அவ்வாறில்லையென்றால் இந்த மாநிலத்தில் நமக்கு முன்னதாக எகிப்திலிருந்தும் சவூதி அரேபியாவிலிருந்தும் வரும் செல்வத்தின் மூலமாக பள்ளிவாசல்களை முஸ்லிம்கள் கட்டியிருக்கின்றார்கள். ஆனால் முஹம்மதிய மஸீஹை ஏற்றுக் கொள்ளாததனால் அவர்களிடம் ஏற்பட்டுள்ள குறையை அஹ்மதிய்யா ஜமாஅத்தால் கட்டப்பட்ட பள்ளிவாசல்கள் மூலமாக மட்டும் தான் நிறைவடையச் செய்ய முடியும். எனவே, இந்த விசயம் ஒவ்வொரு அஹ்மதிக்கும் மேலும் கவனமூட்டக் கூடியதாகவும் கவலை தரக்கூடியதாகவும் இருக்க வேண்டும். உங்களது பொறுப்புகள் அதிகமாகி விட்டது. இந்த பள்ளிவாசலுக்குரிய உரிமையைச் செலுத்துவதற்கு நீங்கள் மிகவும் அதிகமாக முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் இந்தக் கடமையை நிறைவேற்றுவதற்கான நல்வாய்ப்பை நமக்கு வழங்குவானாக!

பள்ளிவாசல் தொடர்பான சில விபரங்களையும் கூறி விடுகின்றேன். பள்ளிவாசலின் பரப்பளவு 1350 சதுர அடிகளாகும். இதற்காக ஏறக்குறைய 1.2 மில்லியன் யூரோ செலவாகியுள்ளது. ஸ்பெயினிலுள்ள ஜமாஅத் தாம் செய்த சிறிய வாக்குறுதியையும் கொடுத்து முடிக்கவில்லை. செய்ய வாக்குறுதியை அவர்கள் நிறைவு செய்ய வேண்டும். பிறகு நான் ஏற்கனவே கூறியது போன்றே பொருளாதார ரீதியாக பலவீனம் இருந்தால் ஒன்று வாக்குறுதியை நிறைவேற்ற முடிந்தால் நிறைவேற்றுங்கள். அல்லது தப்லீக் களத்தில் இறங்கி செயல்பட்டவாறும் உங்களது வாக்குறுதியை நிறைவு செய்ய முடியும்.

இவர்கள் தந்துள்ள கணக்கின்படி ஹாலில் 250 பேர்கள் நிற்க முடியும். எவ்வாறிருப்பினும் இந்த ஹால்கள் மிகவும் பெரியதாக இருக்கின்றன. போதுமான அளவு மற்ற வசதிகளும் உள்ளன. 7 அலுவலகங்கள் உள்ளன. ஒரு நூலகம் உள்ளது. ஒரு புத்தகக்கடை இருக்கின்றது. சமையலறை மிகவும் நன்றாக இருக்கின்றது. Technical Room -ம் இருக்கின்றது. இவ்வாறே இந்த முழு கட்டிடத்தையும் குளிர்சாதன வசதி உள்ளதாக ஆக்கியிருக்கின்றார்கள். ஆண்கள், பெண்கள் தனித்தனியாக உளூ செய்வதற்கான வசதிகளும் இருக்கின்றது.

முதலில் வாங்கப்பட்ட பங்களாவில் அதாவது முதலில் நாம் வாங்கிய இடத்தில் மேலும் மூன்று அறைகள் கட்டப்பட்டுள்ளன. ஒரு பத்திரிகை சில நாட்களுக்கு முன்பு இது இந்த மாநிலத்திலுள்ள மிகப்பெரிய வணக்கஸ்தலம். அது தனது உண்மை வடிவத்தை உலகிற்கு வெளிப்படுத்தியுள்ளது என்று எழுதியுள்ளது. ஆக, இந்த மாநிலத்தின் மிகப்பெரிய வணக்கஸ்தலமானது நம்மில் ஒவ்வொருவரும் அதற்குரிய உரிமையைச் செலுத்தும் போதுதான் அதன் உண்மை வடிவத்தை உலகிற்கு வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

இன்னொரு நல்ல விசயத்தையும் இந்த பத்திரிகை எழுதியிருக்கின்றது. அது அடியார்களுக்குரிய உரிமையைச் செலுத்துவதை வெளிப்படுத்தியுள்ளது. அதனை இங்குள்ள ஒவ்வொரு அஹ்மதியும் வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். அது இவ்வாறு எழுதுகின்றது:

இஸ்லாத்தின் மீது கொண்ட பற்றின் காரணமாக அஹ்மதிகள், அல்லாஹ்வின் பெயரில் இரத்தம் ஒழுகும்படி செய்யக்கூடிய ஒவ்வொரு நபருக்கும் எதிராக உள்ளனர்.

இதைத் தவிர இந்த பள்ளிவாசலுடன் மேலும் இரண்டு Multi Purpose Hall இருக்கின்றது. ஆண்களும் பெண்களும் தங்களது தேவைக்கு இதை பயன்படுத்திக் கொள்ளலாம். இந்தப் பள்ளிவாசலை இந்தப் பகுதியிலும் இந்த மாநிலத்திலும் இஸ்லாத்தின் உண்மையான படத்தைக் காட்டக்கூடியதாக அல்லாஹ் ஆக்கி வைப்பானாக! இந்தப் பகுதியில் வாழ்கின்ற ஒவ்வொரு அஹ்மதியும் முயற்சி செய்து இதற்குரிய உரிமையைச் செலுத்துபவர்களாக ஆகட்டும்! நான் ஏற்கனவே கூறியது போன்றே இந்த பள்ளிவாசலைக் கட்டுவதற்கு அதிகமாக தலைமையகம்தான் உதவியுள்ளது. Technical உதவியும் தலைமையகத்திலிருந்துதான் செய்யப்பட்டது. நமது பெரியவர் சவுத்ரி இஃஜாஸ் சாஹிப் அவர்கள் நமது பழைய எஞ்ஜினியர் ஆவார்கள். அவர்கள் மிகவும் உழைத்தவாறு இதில் பல பணிகளைச் செய்துள்ளார்கள். விளக்கமாக எல்லாவற்றையும் அவர் ஆய்வு செய்தார். எங்கெல்லாம் அதிகமாக செலவு வந்ததோ அங்கு அதை குறைத்தார்கள். ஆனால் அவ்வாறு குறைத்ததால் தரத்தில் எந்தக் குறைவும் ஏற்பட அவர்கள் விடவில்லை. அதில் எவ்வகையிலும் Compromise செய்ய விடவில்லை. அவர்கள் நோயாளியாகவும் இருக்கின்றார்கள். வாரத்தில் ஒருமுறை சிறுநீரகக் கோளாறு காரணமாக அவர்களுக்கு டயாலிஸிஸ் செய்ய வேண்டியது வருகிறது. ஆனால் அவர்கள் மிகுந்த தைரியத்துடன் செயல்பட்டார்கள். அல்லாஹ் அவர்களுக்கும் அதற்கான நற்கூலியை வழங்குவானாக! மேலும் அவர்களுக்கு உடல்நலத்தையும் ஆரோக்கியத்தையும் வழங்குவானாக! அதன் காரணமாக வருங்காலத்திலும் அவர்கள் ஜமாஅத்தின் பணிகளைச் செய்து வர வேண்டும்.

★ ★ ★ ★ ★


**JUMUA KHUTBA**

**HAZRATH KHALIFATUL MASIH V**

at BAIT-UR-RAHMAN MOSQUE, Valencia, Spain.

on **29.03.2013**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD H.A.

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456